(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 51.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 மே 09, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

277/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவில் மகளிர் தேசிய பாடசாலையொன்று உள்ளதுடன், குறித்த பிரிவில் ஆண்கள் தேசிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், தேசிய பாடசாலையாக மாற்றப்படுவதற்கு மேற்குறிப்பிட்ட பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைக்கு வழங்கப்படவுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(iv) அத் தேசிய பாடசாலை ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

430/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தேசிய மட்டத்திலான விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மைதானம் ஒவ்வொன்றும் அமைந்துள்ள இடம் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்கெய்சர் (MC Heyzer Stadium) விளையாட்டு மைதானத்தை தேசிய மட்டத்திலான விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்குத் தேவையான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதால் அந்த அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(iv) இடைநிறுத்தப்பட்டுள்ள அகழ்வுப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட மக்கெய்சர் மைதானத்தை சர்வதேச கிரிக்கெட் மைதானமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

432/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் சட்டரீதியான உரிமங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகள் தரநிலைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுவதால் அதிகளவிலான சுற்றாடல் அழிவுகள் இடம்பெற்று வருகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறையியல் ஒன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் அதற்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாகவும் புதிய முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமேல் மாகாணத்தில் பாரிய அளவில் சுற்றாடல் அழிவுக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் தலையீடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iii) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையை தொடர்ந்தும் நடாத்திச்செல்ல வேண்டிய தேவை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

452/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிங் கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக காலி மாவட்ட மக்களின் வாழ்வியலுக்கும் உடமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டின் பின்னர் கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது வேறு நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளைத் தயாரித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்ட அறிக்கைகள் / சாத்தியவள ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(vi) அதற்கான நிதியைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, முடிவுற்ற ஆண்டு, ஒதுக்கப்பட்ட தொகை, செலவிட்ட தொகை, செயற்படுத்திய நிறுவனம் மற்றும் பெறப்பட்ட தீர்வுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

455/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரைகம்புர கைத்தொழிற் பேட்டையில் கைத்தொழிலாளர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள காணிகளில் தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ள காணிகளில் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ள காணிகளைப் பெற்றுள்ள முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ள நிதித்தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிற் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டிடத்தின் தற்போதைய நிலை யாது என்பதையும்;

(ii) அந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் செலவு செய்துள்ள தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

493/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சுதேச மருத்துவப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் சுதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஆயுர்வேத மருத்துவர்களின் பற்றாக்குறை காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்னேரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் இயன்முறை மருத்துவ அலகொன்று இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அலகை நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலையை மேற்கொண்டது யாரென்பதையும்;

(iii) மேற்படி ஒப்பந்தத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி விசாரணையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

575/2025

கௌரவ சானக மாதுகொட,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உப அஞ்சல் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்கு உப அஞ்சல் அதிபர்களுக்கு இன்றளவில் செலுத்தப்படுகின்ற அலுவலக வாடகைக் கொடுப்பனவுத் தொகை போதுமானதாக காணப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி வாடகைக் கொடுப்பனவை அதிகரிப்பதிலுள்ள தடைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iv) அவற்றை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

781/2025

கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சுற்றுலா அமைச்சினால் மஹியங்கனை நகரத்தில் சுற்றுலா வசதி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) மேற்படி வளவின் அளவு சதுர அடிகளில் எவ்வளவு;

(iii) அதனை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் நோக்கம் யாது;

(v) மேற்படி நோக்கம் நிறைவேறியுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிலையத்தின் கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குத்தகைதாரரின் பெயர் என்ன;

(iii) மாதாந்த குத்தகைத் தொகை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

847/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, அந்த ஆணைக்குழுவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விசேட சலுகைகளின் கீழ் காணிகளைக் கையுதிர்த்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு காணிகள் கையுதிர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அது தொடர்பிலான முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு விசேட சலுகைகளின் கீழ் காணிகள் கையுதிர்க்கப்பட்டதன் சட்ட ரீதியான அடிப்படை யாதென்பதையும்;

(v) அவ்வாறு கையுதிர்க்கப்பட்ட காணிகளை வேறு தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது கைமாற்றம் செய்வதற்கோ இயலுமையுள்ளதா என்பதையும்;

(vi) விசேட சலுகைகளின் கீழ் கிடைக்கப்பெற்ற காணிகளுள் வேறு தரப்பினருக்கு விற்பனை அல்லது கைமாற்றம் செய்யப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vii) மேற்படி காணிகளை வேறு தரப்பினருக்கு விற்பனை அல்லது கைமாற்றம் செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாமர சம்பத் தசனாயக அவர்கள் 2025 மார்ச் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

3.

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மாபொட்டுவன ஸ்ரீ பியரத்தன தேரர் சுவசெவன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 2/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல்,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகள் தொடர்பில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் இந்நாட்டின் சமூகத்திலும் உரையாடல் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொது மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல், அகற்றுதல் அல்லது அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களிடமிருந்தும் நியாயமான பதிலை பாராளுமன்றத்தில் விவாதித்துப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா.12/2024

கௌரவ ரோஹண பண்டார,— அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது அரச துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறையானது ஒரு சிலரின் கைகளில் உள்ள நிலையில் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்ற காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரச துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா.19/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் நிகழும் பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பான விடயங்கள் கணக்காய்வறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதால், அரச நிறுவனங்களில் அவ்வாறான ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு அவ்வறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

4.

பா. 25/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடு ஒன்றை வழங்குதல்,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கான வீடு ஒன்றிற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்ற காரணத்தால் பிரதான குடியிருப்பாளரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக வீடு ஒன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது வாடகைக்குப் பெறுவதற்கு அவரை வலுவூட்டுவதன் மூலம் அவருக்கு வசதிசெய்து கொடுத்தல் அவசியமாகும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா.37/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பொது போக்குவரத்து தர நிர்ணயங்களுக்கமைவான பேருந்துகளை மாத்திரம் நாட்டுக்கு கொண்டு வருதல் தொடர்பான சட்டங்களை ஆக்குதல்,— இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளும் தனியார் துறை பேருந்துகளும் போக்குவரத்துக்கு தகுந்த நிலைமையில் காணப்படாமையினாலும், குறித்த பேருந்துகளில் அதி கூடிய பேருந்துகள் லொறி அடிச்சட்டங்கள் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளவை என்பதாலும், எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் துறைக்கு பேருந்துகளை இறக்குமதி செய்கையில் பயணிகள் போக்குவரத்துக்கு வடிவமைக்கப்பட்ட, பயணிகள் சௌகரியத்துக்கு உகந்த, பொது போக்குவரத்து தர நியமங்களுக்கமைவான பேருந்துகளை மாத்திரம் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு ஏதுவான சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா.38/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இலங்கையில் "அபிவிருத்தி முன்மொழிவுகள்" என்ற பெயரில் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள எனினும் எவ்வித பயன்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாத அனைத்து கட்டிடங்களையும் மக்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— வெளிநாட்டு உதவி அல்லது வெளிநாட்டுக் கடனுதவி அடிப்படையில் அல்லது மத்திய அரசு அல்லது உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிதியைச் செலவிட்டு “அபிவிருத்தி முன்மொழிவுகள்” என்ற பெயரில் நாடு முழுவதும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இதுவரை நிர்மாணிக்கப்பட்டு, எனினும் எவ்வித பயன்பாடுகளுக்கும் உட்படுத்தப்படாத அவ்வாறான கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகிக்க முடியுமான வகையில் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 3/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 40/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 41/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 42/2025

கௌரவ ருவன் மாபலகம,— பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

36.

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 46/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா.47/2025

கௌரவ ரோஹண பண்டார,— விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

*44.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*45.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

***  அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**